Regd: No M. 5277. UDUMALAI BEERANGI. டெலிபோன் 2597

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை R. இரங்கநாதன்

வெடி 1.] 8-பக்கங்கள் சென்னை, சனிக்கிழமை (12-2-1949) விலை 1 அணா [குண்டு 19

கண்ணிழந்தார் காமராஜ்!

(குடந்தை கா. சொக்கலிங்கம்)

தலைப்பைக் கண்டதும் தடுமாற்றம் கொள்ளலாம் தன்மான இயக்கத்தைச் சாராதார். கண்ணீர் விடலாம் காமராஜ் "குருப்பு"கள். வம்பன் கூற்று எனக் கூறலாம் வட நாட்டினருக்கு வக்காலத்து வாங்கும் வக்ர புத்தியாளர். ஆயினும் வாசகர்கள் தீர்ப்புக் கூறட்டும் காமராஜ் கண்ணிழந்தாரா? இல்லையா?

கண்ணிழந்தார் காமராஜ்! ஆம்! கண்ணிருக்கிறது. கருவிழிகளிருக்கின்றன. ஓரளவிற்கு ஒளியுமிருக்கிறது. ஆனால் கூர்ந்து பார்க்கவில்லை இக்குறை மதியாளர் கூர்ந்து பார்த்திருப்பாரேயானால் கோவையில் ஜனவரி 24ந்தேதியன்று கண்ணிழந்தவிதமாக பேசியிருக்கமாட்டார். ஒருக்கால் தமது சொற்பொழிவை நிகழ்த்திக் கொண்டிருக்கும் நேரத்தில் சரச சல்லாப உல்லாசத்திற்குரிய "யோக"த்தை எண்ணி தம் அறிவை அடகுவைத்து விட்டார் போல் தோன்றுகிறது. ஆகவே தான் அறிவற்றதனமாக, சென்னை மாகாணத்தில் வடநாட்டார் ஆதிக்கமே கிடையாது என்றும் வரப்போகும் தேர்தலிலே திராவிட கழகத்தினர் பதவியைக் கைப்பற்ற துவேஷப் பிரசாரம் செய்கிறார்கள் என்றும் கூறியிருக்கிறார்.

உண்மையிலேயே கண்ணிருக்குமானால் சென்னை மாகாணத்தில் வடவர் ஆதிக்கம் இல்லை என்று கூறும் இவர், "ஸிமின்ட்" உற்பத்திக்குச் சிறந்த இடமாகிய "டால்மியா"புரம் எங்கிருக்கிறது. இந்த 'டால்மியா' யார்? என்பதையோ அல்லது சென்னை மவுன்ட் ரோட்டில் மலை போன்ற மாளிகையில் உட்கார்ந்து கொண்டு கொள்ளை லாபமடிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு பல பத்திரிகைகளுக்கு முதலாளியாக இருக்கும் கோயங்கா யார்? எங்கிருந்து வந்தவர் என்பதாவது தெரிந்திருக்கும்.

அதுதான் போகட்டும். அவர் காலில் அணிந்திருக்கும் செருப்பு "பாட்டா", அது எளிதில் தேய்ந்துவிடாத வண்ணம் அடிக்கப்பட்டிருக்கும் ஆணி தயாரிக்கப்பட்ட இடம் "டாட்டா" இரும்புச்சாலை. மேலும் சிற்றுண்டி அருந்தச் செல்லும் காப்பிக் கடைகளில் 100க்கு 90 வடநாட்டினருக்குச் சொந்தம். வனிதையரின் எழில் மிக்க மேனிக்கு மெருகூட்டும் ஆபரணங்களில் பொதிக்கப்படும் வைரங்களுக்கு "சுராஜ்மல் லல்லுபாய்"களும் இருப்பதைக் கண்டும் காணாதவர் போல் பேசுவது கண்பார்வையிலுள்ள கோளாறினாலா?

தென்னாட்டில் உற்பத்தி செய்யப்படும் மூலப்பொருள்கள் அத்தனையும் வடநாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டு கல்கத்தா, பம்பாய், அலகாபாத் முதலிய ஊர்களில் உள்ள தொழிற்சாலையில் பல பொருள்கள் உற்பத்தி செய்து, அவைகளை விற்பனை செய்வதற்கு தென்னாட்டைத் தங்களுக்கு மார்க்கட்டாக வைத்துக் கொண்டு "'கொள்ளை' கொள்ளை" என்று கோடி கோடியாக பணம் சம்பாதிக்கும் கூட்டம் யார்? என்பதுமா இவர் கண்ணில்படவில்லை.

கையில் தகர டப்பா, தோளில் கம்பளியுமாக சென்னை சென்ட்ரல் புகை வண்டி நிலையத்தில் பிளாட்பாரம் டிக்கட்டும் இல்லாமல் இறங்கி ராமேஸ்வரம் செல்லுகின்றேன் 'தருமம்' கொடு தருமம் "ஜெய் சீத்தா ராம்" எனக் கூறி தென்னாட்டவரை ஏய்த்துப்பிச்சை எடுத்துப் பின் பெரும் பணம் சேகரித்து லால்களாகவும், ஜீகளாகவும், சேட்களாகவும் சௌகார்களாகவும் சென்னையிலேயே ஒரு சௌக்கார்பேட்டையும் உண்டாக்கிக் கொண்ட ஊதாரிக் கூட்டத்தினர் யார்? என்பதுமா புலப்படவில்லை?

நாள் முழுதும் பாடுபட்டு நல்லதோர் பலன் காணாது, வாண்டதலை! ஒட்டிய கன்னங்கள்! குழிவிழுந்த கண்கள்! பசியோ பசி என்று அலறும் பச்சிளம் பாலர்கள் பல பொத்தல்களுடைய பழங்கந்தையை

7-ம் பக்கம் பார்க்க

வடநாட்டு நடராஜா

வடநாட்டு நடராஜா......திராவிடரை வாழ்விக்க வந்த சுகராஜா......தில்லையும் சிதம்பரமும் வடநாட்டில் தானே......அதை அறியாத பேரும் திராவிடர்தானே?......ஏற்றுக்கொள்...தூப தீப கற்பூர ஆராதனை...உன்னையல்லால் வேறு கதியும் உண்டோ எமக்கு......எங்களுடைய கலாச்சாரம்-நாகரீகம்-சுய மரியாதை இவைகளை வடவருக்கு அர்ப்பணம் செய்து கொடுத்து ஒரு வருடத்துக்கு மேலாகியும் உன்னை பூஜிக்கும் வாய்ப்பு இப்பொழுதுதானே கிடைத்தது......ஜண கன...மண.........

நாட்டின் உயிர் நாடி!

[தனமனோகரன்]

ஒரு நாடு முன்னேற்றமடைய விடுதலையடைய அந்நாட்டு மக்கள் தங்கள் தாய் மொழியை முன்னிருத்தியே தொண்டுகளாற்றி வருகின்றனர். ஒவ்வொரு நாட்டினுடைய முன்னேற்றமும் பெருமையும் அந்தந்த நாட்டு கவிஞன்-எழுத்தாளன்—பேச்சாளன் என்ற பேனா வீரர்களிடமே உள்ளது. இத்தகையப் பெரிய பொறுப்பை ஏற்று, மக்களது வாழ்க்கைக்குத் தேவையான உரிமையை அடைய அவர்கள் எத்தகைய எதிர்ப்புக்கும் அஞ்சாது, உயிரை மதியாது ஏக போக வாழ்வில் வீண் காலங் கடத்தாது ஆற்றிய பணிகள் மிகப் பல. இவர்களே மக்களுடைய உண்மையான பிரதிநிதிகள்!

பிரான்சு நாட்டிலே பதினாறுவது லூயி ஆட்சி புரிந்த காலத்திலே அம்மண்டைக் கர்வம் பிடித்த மன்னன் பாமர மக்களை மக்களாக மதியாது, மாக்களாக நடத்தினான். அந்நாட்டிலிருந்த குபேரர்கள் குற்றம் செய்யாத பாட்டாளி மக்களை வதைத்து சிறைக்கோட்டத்தில் அடைத்து வைக்கும் உரிமை பெற்றிருந்தனர். எண்ணற்ற இளம் வாலிபர்கள் தங்கள் புரட்சிக் கருத்துக்களை வெளிப்படுத்த முயன்ற பொழுதெல்லாம் அடக்கு முறை பாணத்திற்கு ஆளாகி சிறைக்கோட்டத்திலடைக்கப்பட்டனர். உழைப்போருக்கோ உரிமையில்லை—உழைத்துத் தொலைக்க வேண்டுமே என்ற கடமைக்காக முணு முணுத்தபடி உழைப்பிலே ஈடுபடுவோர் உயர மார்க்கமில்லை, அந்த கபடன் ஆட்சியிலே! ஆனால் மக்களின் உழைப்பின் பயனை உறிஞ்சி வாழும் அந்நாட்டு முதலாளி வர்க்கத்திற்கோ உரிமை பல உண்டு—வரி செலுத்த வேண்டியதில்லை. அரசனே அவர்களுக்குப் பயந்துதான் ஆட்சி செய்து வந்தான், அவர்களின் தயவு அவனுக்குத் தேவையாயிருந்த காரணத்தால்! இவற்றையெல்லாம் கண்டும் கேட்டும் வந்த மக்கள் தங்களது பொறுமையை இழந்து விட்டனர், மக்களது உள்ளம் கற்பாங்கான மலை என்று எண்ணி இறுமாந்திருந்த அரசன் விரைவில், அது வெறும் "மலை" அல்ல, "எரி மலை"—நெருப்பை அள்ளி அள்ளி வீசும் மலை என்று அறிந்து கொண்டான். —பீதி அவன் உள்ளத்தைப் பற்றிக் கொண்டது. மக்களின் அடிமையுள்ளம் சுதந்திரத்தை நாடியது-அதற்கு புரட்சிதான் வழி என்று கண்டதால் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.

இதற்கேற்றார்போல் மக்களின் உள்ளக் கருத்தை பிரதிபலிக்கச் செய்யும் வகையில், நாட்டின் நிலையறிந்து அஞ்சாது அந்நாட்டு பேனா வீரர்கள் தீட்டினார்கள் திட்டத்தை! மக்களது விடுதலைக்கு வழி வகுக்க, புரட்சிக்கு வித்திட்டனர், அந்நாட்டின் மானத்தைக் காப்பாற்றிய பேனா வீரர்களான ரூசோ (Rousseau), வால்டேர் (Voltaire), மொந்தாங்குயோ (Montesquieu) முதலியவர்கள் இவர்களது கனல் கக்கும் எழுத்துக்கள் மக்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் அளித்தன. புரட்சி உருவாயிற்று! பாஸ்டிலி சிறைக் கூடம் தகர்ந்து தரை மட்டமாக்கப்பட்டது, முடியாட்சி முடிவுற்று குடியாட்சி மலர்ந்தது. மன்னன் மாண்டான்; மக்கள் களிப்பெய்தினர், "இந்த நாட்டு பாமரமக்கள் உழைக்கவே பிறந்தவர்கள்—வாழப்பிறந்தவர்களில்லை, அவர்கள் என்றென்றைக்கும் அடிமையாயிருக்க வேண்டியவர்கள்;' என்ற விதியைச்சாடி, அதனைக் குழி தோண்டிப் புதைத்து மக்கள் ஆட்சியை நிறுவினர் நாட்டில்! இந்தப் புரட்சிக்கு வித்திட்டு மக்களுக்கு வாழ வழி வகுத்துக் கொடுத்த பேனா வீரர்களை இன்று வையமே போற்றிப் புகழ்ந்து பாராட்டுகிறது. வீரனின் வாளை வாங்க முடிந்தது—எதிர்த்து ஒடிக்க முடிந்தது—வஞ்சித்து வளைக்க முடிந்தது, ஆனால் இந்த பேனா வீரர்களின் பேனாவை, அடக்கு முறை, சிறை, நாடு கடத்தல் எனும் எவையினாலும் வளைக்கவோ ஒடிக்கவோ முடியவில்லை. புரட்சிக்கான கையிருப்பை அளித்தனர் இந்த பேனா வீரர்கள்! வாழ்க பேனா வீரர்கள்! என வாயாரப் புகழ்ந்தனர், பிரான்சு மக்கள்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் ரஷ்யாவில் ஒரு யுகப் புரட்சி நடை பெற்றது. உல்லாச புரியிலிருந்து ஊராண்ட ஜார் மன்னன் ஆட்சியின் கீழ் பிரபுத்வ பிற்போக்குக்கு—பாதிரிகளின் பாதகச் செயல்களுக்கு—மத மூட நம்பிக்கைக்கு காப்பளிக்கப் பட்டது: பாலின்றித் தவித்த குழந்தைகளின் அழுகுரல் அந்த உல்லாச புரியோனுக்குக் கேட்கவில்லை. பெண்களின் பெரு மூச்சுடன் கூடிய புலம்பல், முதியவர்களின் முறையீடு, "உணவின்றி உயிர் போகும் நிலையிலிருக்கிறோமே, உதவி புரிய வேண்டும் என்ற வேண்டுகோள்—இவையனைத்தும் அந்தப்புர இன்பச் சேற்றில் மூழ்கியிருந்த மன்னவனுடைய செவியை எட்டவில்லை—எட்ட முடியாதபடி தடுத்து விட்டான், பர்திரி உருவில் நடமாடிய பாதகன் ரஸ்புடீகன்!

ரஷிய நாட்டு மக்கள் வறுமையில் உழலுவதைக் கண்டு, இளம் வாலிபர்கள் மன்னனின் கொடுங்கோல் ஆட்சியை எதிர்க்க முற்பட்ட பொழுதெல்லாம் தூக்கு மேடையிலே தொங்கவிடப் பட்டது கண்டு கொதித்தெழுந்தான் பேரறிஞன் காரல் மார்க்ஸ்—தீட்டினான் பொதவுடமைத் திட்டத்தை! பேனா முனைகொண்டு அரண்மனைகளை, ஆஸ்ரமங்களை அஞ்ஞானிகளின் கோட்டைகளைத் தாக்கினான். அரசாங்கம் தங்கள் ஆணவத்திற்கு முடிவு ஏற்பட்டு விடுமோ வென அஞ்சிற்று—எனவே சீற்றங் கொண்டது உண்மை ஊழியனான மார்க்ஸின் மீது! கொடுமைகள் பல இழைத்தது—பல கடுந்தண்டனைகள் தந்து அவனை அடக்கப்பார்த்தது அவற்றையெல்லாம் அஞ்சாமல் ஆண்மையுடன் ஏற்றான். மார்க்ஸ் புரட்சிக் கருத்துக்களை—கிளர்ச்சிக்கான திட்டங்களை தெரியப்படுத்திய அவனுடைய நூல்களுக்குத் தடை விதிக்கப்பட்டது, இங்கு திராவிடர் கழகத்தினரின் பகுத்தறிவு நூல்களுக்கு அரசாங்கம் தடை விதிப்பதுபோல! மக்கள் சிந்தித்தனர். மார்க்ஸ் நூல்கள் தடைபடுத்தப்பட காரணம் என்ன?" என்று சிந்தித்தனர். விடை கிடைத்தது." நம்முடைய உள்ளக் கருத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருப்பதாலேயே—புரட்சிக்கான கையிருப்பை நமக்கு அவை அளிப்பதாலேயே அவற்றிற்கு தடை விதிக்கப் பட்டது" எனக் கண்டனர். முடியாட்சியைத் தகர்க்க மார்க்ஸ் திட்டமே உகந்தது எனத் தீர்மானித்து அதனைக் கைக்கொண்டனர். மார்க்சைத் தங்களது தலைவனாக ஏற்றுக் கொண்டனர். பிறகு மார்க்கிசத்தின் மறு பிறப்பாக லெனின் தோன்றினான். லெனின் தலைமையில் புரட்சி உருவாயிற்று. அரசனைப் போர் முனையில் சந்தித்து வெற்றி பெற்றனர் ரஷிய மக்கள். ஜார் ஆட்சி சரிந்தது. ரஷ்யர் யாவரும் களிப்புச் சிந்து பாடினர்-பாதகன் ஜாரின் வீழ்ச்சியைக் கேள்வியுற்று! மார்க்சைப் புகழ்ந்து போற்றினர்—லெனினைத் தலைவனாக்கினர்— மார்க்கிசத்தை அடிப்படையாக வைத்து மக்கள் ஆட்சி நிறுவினர். இது ரஷ்யாவிலே பேனா வீரனின் முயற்சியால் தோன்றிய புதுமை!

பேனா வீரர்களின் பேனாவிலிருந்து சீறி எழுந்த புரட்சிக் கருத்துக்கள் தாம் புரட்சியாக உருவாகி, மன்னர்களின் மமதையைத் தொலைத்து, தருக்கர்களின் செருக்கை ஒழித்து, மதப் பித்தர்களின் கொடுமையை அழித்தது. மாபெரும் வீரன் நெப்போலியன் கூட பேனா பிடித்தோருக்குப் பயந்தான் என்றால் அம்மாவீரர்களின் வல்லமையைப் பற்றி கூறுவானேன்! இவ்வளவு வல்லமையையும் அவர்களுக்கு அளித்தவை அவர்களுடைய தன்னலங் கருதா உழைப்பு; மற்றொன்று பொது நலம்.

இத்தகைய பேனா வீரர்களின் உற்ற துணைதான் "பத்திரிகை உலகம்". மக்கள் இதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்போ அளவற்றது. ஆனால் இன்று திராவிட நாட்டிலோ பத்திரிகைத் தொழில் செல்வந்தர்களின் கையில் தானிருக்கிறது, பெரும்பான்மையான பத்திரிகைகள் வடநாட்டு குபேரர்களின் கையில் அடங்கிக் கிடக்கிறது. திராவிடர்களின் உரிமையை மறுத்து—சுரண்டிவரும் திட்டத்தோடு செயலாற்றும் அன்பர்களின் திருக்கரங்களிலே தான் 'பத்திரிகை உலகம்' இருக்கிறது. தமிழ் நாட்டிலிருந்து கொண்டு

பிழைக்க வழி!

(மா. சு.)

ஏய் மாரி!

சார்.

ஏன் பத்திரிகை 'டல்'லாப் போச்சு?

இந்த வாரம் .... பார்த்து ......

சரி .. சரி .. இந்த வாரம் என்ன எழுதப்போறே?

சீனாவிலே ... கம்யூனிஸ்டுகள்...

சே... சே...

என்னாங்க?

அதுக்கு 'மவுசு' அவ்வளவில்லே!

பின்னே?

கருப்புச் சட்டைக்காரனைப் பிடி

அவனுக்கிட்டே போகக் கூடாதுங்க!

ஏன்?

அவனுக நம்மை சட்டை பண்ணி பதிலே சொல்றதில்லீங்களே!

அதைப்பத்தி ஏனப்பா உனக்கு கவலை?

அவனுகளைப் பற்றி எழுத என்ன இருக்குதுங்க?

இந்தி எதிர்ப்பு?

அதான் ஊர் ஊரா பெரிய பெரிய கூட்டமா போட்டு ஏகப்பட்ட ஆதரவு திரட்டறான்களே;

போப்பா! யார் சொன்னா பெரிய கூட்டம்னு? அதெல்லாம் ஒண்ணுமில்லே "புசு புசுத்துப் போச்சு" ன்னு எழுது!

ஜனங்க நம்ப மாட்டாங்களே!

உனக்கு ஜனங்களுடைய நம்பிக்கை வேணுமா? காசு வேணுமா?

ஆமாங்க... சம்பளம்கூட போதவில்லிங்க

அது சரி! பார்க்கலாம்! இப்போதைக்கு நம்ப பத்திரிகைக்கு ஜோசியப் பகுதியும், கருப்பன்களை வையறதும் தான் உயிர்த்தண்ணி! தெரிஞ்சுதா?

ஏங்க? காண்டேகர் கதை?

ஊம்...ம்... அதை யாரோ படிக்கறுக்கும் தொடர்ச்சியா?

இந்த சு. ம. க்கள் படித்தாலும் படிப்பானுக!

அப்ப சரி... காண்டேகரை விட்டுடாதே!

சரிங்க!

பெரியாரைப் பற்றி எழுதும் போது 'ஸ்ரீமான் நாயகர்' என்றே குறிப்பிடு.

எனக்குத் தெரியாதுங்களா? சம்பளம்......

அது சரி... பாத்து கொடுக்கலாம்... இந்த வாரம் ஒரு ஐநூறு காப்பி'யாவது ஓடுமா?

ஓடுங்க! சே... இந்த் நமஸ்காரம்.

தமிழர், தமிழர் (திராவிடர்) தனியாட்சி நடத்தவேண்டும் என்பன போன்ற பிரச்சனைகளை இருட்டடிப்பு செய்வதில் முனைந்து வருகின்றன தமிழ் நாட்டு பத்திரிகை உலகம்.

தமிழ் நாட்டிலேயே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து வரும் ஒரு கூட்டம் தன்னை தமிழன், தமிழ் நாட்டான் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்படுகிறது என்றால் அந்தக் கயவர்கள் நிச்சயம் இந்த நாட்டு துரோகிகள் தானே? இந்த மாதிரி தமிழையும் தமிழ்

8-ம் பக்கம் பார்க்க

பணமே நீ ஒழிக !

'பொனு வராதா'

இந்த நான்கு நாட்களாகவே என் மீது அவர் வெறுப்பாக இருந்தார் என்று அவர் பேசசுக்கள் கூறவில்லை. அவர் முகம் கூறிற்று. நானும் சிந்தித்தேன் ஏதாவது தவறு செய்துவிட்டோமா என்று. ஒன்றுமே தோன்றவில்லை. என்னுடன் இரண்டு வார்த்தைகள் பேசாவிட்டால் அவருக்கு உணவு கொள்ளாது; எனக்கும் அப்படித்தான். அவரைப் பார்க்காவிட்டால் ஒரு ஆண்டு ஊரில் இல்லாதது போன்ற எண்ணம் ஏற்படும். அப்படியிருந்த என் தோழனின் தந்தை திடீரென 'கடுமுகம்' கொண்டு என்னைக் கண்டார் என்றால் எனக்கு ஏமாற்றம் தானே தோன்றும் எல்லோருக்கும் என்னைக் கண்டால் வெறுப்புத் தோன்றியபோது கூட என் மீது அவர் அளவு கடந்த அன்பு வைத்திருந்தார். ஏன்? எனக்காகவே ஒரு வீட்டைக்கட்டி என்னை அண்மையில் வைத்துக்கொண்டார். நான் எண்ணற்ற நிகழ்ச்சிகளை எண்ணி வருந்திய போதெல்லாம் ஓயாமல் ஆறுதல் கூறிக் கொண்டேயிருப்பார் அத்தகையவர் இன்று நாட்கணக்கில் என்னுடன் பேசாமலேபே யிருந்தால் அதில் ஏதாவது கருத்து இருக்கத்தானே செய்யும் என எண்ணிக் கொண்டு மட்டுமல்ல, வருந்திக்கொண்டே நாட்களைத் தள்ளி வந்தேன்.

வெண்ணிலவு காய்ந்து கொண்டிருந்தது. அண்மையிலிருந்த வேப்பமரம் தானிருப்பதாகக் காட்டிக் கொண்டது. அதற்கு காற்று உதவி புரிந்தது. வேப்பமரக்காற்று குளிர்ச்சியைக் கலந்து என்மீது மோதிப்பார்த்தது. பொங்கலுக்காக வீட்டின் சுவர்கள் புது ஆடை அணிந்திருந்தன. மதியோனின் வெண்கதிர்கள் சுவற்றின் மீது மோதுவதும் அப்பிரதிபலிப்பு என் இருண்ட மனத்தில் தாக்குவதும் என்னை எங்கெங்கோ அழைத்துச் சென்றது.

அன்றுதான் நான் என் தோழனின் தந்தையை ஊர்தி நிலயத்தில் பார்த்தேன், அவர் நாகரிக உலகின் பிரதிநிதியாகவே தோன்றவில்லை. சென்ற நூற்றாண்டு மனிதரின் தன்மையிலேயே காணப்பட்டார். எதிர்பாரா விதமாக எங்களுக்குள் பேச்சு ஆரம்பித்தது. அதற்கு முன் அவரை எனக்குத் தெரியாது. இருந்தாற்போலிருந்து 'கட்சி எப்படியிருக்கிறது' என்றார், நான் ஆச்சரியப்பட்டேன். ஆளைப்பார்த்தால் வைதீகத்தின் வழித்தோன்றியாயிருக்கிறார். நம்மைக் கட்சியைப் பற்றி விசாரிக்கிறாரே? ஏதோ கிண்டல் செய்கிறார் என எண்ணி ஐயுற்றேன். பின் ஏதோ அலட்சியமாக பதில்கூறினேன். பள்ளியில் பார்ப்பனரின் தொல்லை அதிகமாக இருக்கிறது போலிருக்கிறதுஎன்றார். நான்மாணவர்களிடையே பழகுகிறவன். ஆதலின் 'ஆம்' என்றேன். பிறகு பேச்சைத் தொடர்ந்தேன். "ஒரு மாணவன் பள்ளியில் உள்ளான். தகுந்த கண்காணிப்பு இருந்தால் அவனைக்கொண்டு பொள்ளாச்சிக்கு உயர்வைக் கொணரலாம். என்றேன்.—பள்ளியில் படிக்கும் மாணவன் என் தோழன். இளந்தோழன். நான் தம்பியென்றுதான் அவனை அழைப்பதுவழக்கம். நன்றாகப் பேசுவான். நல்ல குரல், வசீகரமான தோற்றம். ஆனால் உடலில் எங்கும் அழுக்குத் தவிர வேறு ஒன்றும் காண முடியாது. உடலில்தான் அழுக்கென முதலில் எண்ணினேன். ஆயின் அவனின் சிறுவயதுத் தோழமை அவனின் உள்ளத்தையும் அழுக்காக்கி வைத்திருந்தது எனப் பிறகுதான் உணர்ந்தேன். அவனின் உயர் குணங்களை புகழ்ந்தேன். தகாதவைகளைக் கூறித்திட்டினேன். பெற்றோர்களைக் கூட கண் காணிப்புச் சரியில்லை எனக் குறை கூறினேன். அவனின் உண்மையான நிலையை அவரிடம் கூறிக்கொண்டே சென்றேன். அவரும் ஒன்று விடாமல் கேட்டுக்கொண்டே வந்தார். இத்தனையும் கூறியான பிறகு "நான்தான் இளங்கோவன் தந்தை" யென்றார். இளங்கோ, அவனின்பெயர், என் இளந்தோழன். நான்மருண்டேன். அதற்குள் 'உடுமலை' செல்லும் ஊர்தி புறப்படத்தயாராகிக் கொண்டிருந்தது. விடை பெற்றுக் கொண்டு கிளம்பினேன்.

அன்று அவர் பார்த்த பார்வை, அவர் பேச்சின் இயல்பு என்னையும் அறியாமல் எதையெதையோ எண்ணச் செய்து இறுதியில் அவரை நாள்தோறும் பார்க்கும் வாய்ப்பைக் கூட்டித் தந்தது. அந்த ஒப்புயர்வில்லாத பார்வையும், இயல்பும் இன்று வேம்பாகமாறி வேதனை செய்கிறதென்றால் அதன் பொருள் என்னவென்றே புரியவில்லை. அருவருப்பு விரோதத்தின் வேராயிற்றே என்று என் மனம் அடிக்கடி அறிவுறுத்திற்று. ஆயின் நான் என்ன செய்ய? அவர் என்னைவிட எவ்வளவு பெரியவர். அவரிடம் நான் என்னவென்று கேட்பது! நாம் ஒன்றைக் கேட்க அவர் ஒன்று நினைத்து விட்டால்... நாம் அறிந்து ஒரு குற்றமும் செய்யவில்லை. பின் ஏன் நாம் அவரைக் கேட்க அஞ்ச வேண்டும்- அதுதான் புரியவில்லை. உண்மையான மனிதர் நம்மேல் உயிரையே வைத்திருந்தார். ஆயின் இன்று மாறிவிட்டார். நான் மருள்கிறேன் அவர் என்னென்ன நினைப்பாரோ தெரியவில்லை.

அன்று சென்னையிலிருந்து 'தந்தி' வந்தது. "உடனே புறப்படு" என்று என் மாமா கட்டளையிட்டிருந்தார். நானும் புறப்பட்டுவிட்டேன். கையில் பணம் இல்லை, என் தாயும் ஊரில் இல்லை. தாய் ஊரில் இருந்தாலும்கூட பணம் கொடுக்கத் தயாராயில்லை. தந்தியை அவருக்குக் காட்டினேன். 'புறப்படு' என்றார். புறப்பட்டுத்தான் இருக்கிறேன் என்று அவர் முகத்தைப் பார்த்தேன். 'பணம் வேண்டுமா?' என்றார் ஆம். என்ற பதில் தட்டுத்தடுமாறி என் வாயிலிருந்து விழுந்தது. 'எவ்வளவு' என்றார் குழுவுடன். 'இருப்பத்தைந்து' என இருமினேன் வெட்கத்தைப் போக்க. இந்த நிலை ஏற்பட்டதே என ஏங்கினேன். நான் வேலையிலாதவன், சென்னை சென்றேன். திரும்பினேன். அன்றிலிருந்து அவர் மனநிலையே மாறியிருந்தது. நாங்கள் அவர் வீட்டில்தான் குடியிருந்தோம். குடிமட்டுமல்ல எனக்கு வேண்டிய எல்லா வசதிகளும் கிடைத்தன. அவரைப் போன்றே என் தோழனின் தாயாரும், அந்த அம்மையாரிடம் என் உள்ளக்கிடக்கையை ஒன்று விடாமல் கொட்டியுள்ளேன். அவர்கள் கூறிய ஆறுதல் என்னை ஆண்மையாளனாக ஆக்கியதுண்டு. மாநாடு, பொதுக்கூட்டம் என்றால் அவர்களின் மைந்தர்கள் இருவர் நானும் என் தோழன் எங்கு சென்றாலும் நன்கொடை. வேண்டாம் என்பேன். இல்லை வைத்துக் கொள் என்பார். இது நான் எங்காவது செல்லும்போது வழக்கமாக ஏற்படும் வாக்குவாதம். அப்படி உண்மையாயிருந்து என்னை ஊக்கியவர் என்ன் நேரடியாகத் தாக்கினாலும் கூட பரவாயில்லை. தாக்காமல் தாக்குகிறாரே! இது நீதியா எனக் கேட்கத்தான் தோன்றுகிறது? யாரைக் கேட்பதுஅவர்தான் என்னைவெறுக்கிறாரே! வெறுக்கக் காரணம் அந்த 25 ரூபாயாக இருக்குமோ! பாழும் பணமே என்னையுமா பழி தீர்த்துக் கொண்டாய். உன்னுடன் நான் என்றுமே அன்புடன் பழகியதில்லையே அப்படியிருந்தும் என்னையேன்வாட்டிவதைக்கிறாய்? உன்னை ஒளித்துவைத்துக் கொண்டு ஊராருக்கு ஏமாற்றுக் காட்டுவதுமில்லை நீ வாழ் நாளுக்கே விரோதியாக முளைத்துவிட்டாயே. அன்று நீஎன் கல்லூரிவாழ்வைக் கெடுத்துவஞ்சம் தீர்த்துக் கொண்டாய். பின் என்னின் ஒவ்வொரு செயலுக்கும் முட்டுக் கட்டையாய் முன்நிற்கின்றாய். வேறு ஊர்களில் உயர்ந்த வேலைகிடைக்கும்பொழுது 'கடன்' என்ற மாற்றானுடன் சேர்ந்து என்னை மிரட்டி மிதித்து விட்டாய். பின்புஇப்பொழுது என்உயிருக்குயிரான பெரியவரை என் தோழனின் தந்தையை, அவமானத்திலிருந்து என்னை மீட்டுக் கொடுத்த ஒரு கள்ளமற்ற உள்ளத்தை, என்னிடமிருந்து பிரிக்க சூழ்ச்சி செய்கிறாயே! உன் சூழ்ச்சி ஆரியத்தையும் மிஞ்சுகிறதே! இது தருமமா! முறையா? நீதியா என்று கேட்கிறேன். பணமே உன்னைத்தான பண்பறியா உவ்ளங்களுடன் கூடிக் குலவு! ஆயின உண்மை உள்ளம் படைத்தவர்களைக் கூட இருந்து குலைத்துவிடாதே. ஒன்று உன் வலிமை ஒழியட்டும் இன்றேல் என் வாழ்வு அழியட்டும். அல்லது அரசாங்கம் உன் ஆணவத்தை அலக்கழிக்க சட்டம் இயற்றட்டும் எப்படியிருந்தாலும் பணமே நீ ஒழிக! நீதி, நேர்மை, அன்பு வாழ்க!

எந்த இனம் ?

சு. மதிவாணன்—இடுவாய்.

1 நீதி அழித்திடும் ஆரியத்திற்கினி
நெஞ்சாணி யென்பதைக் கண்டபின்னும்
தீதில்லா மக்களை வாதிட அழைக்கும்
தர்ப்பை அடப்பத் துணைகொண்ட கசடே

2 ஒண்டுதற்காகவே வந்த பிடாரிகள்
ஊரின் பிடாரிகளான தன்றி
பிண்டத்திற் காகவே பொய்யும் பகையும்
புனைந்து வைத்தது எந்த இனம் ?

3 சாதி பிரித்தது எந்த இனம் ?—பல
சாமி படைத்தது எந்த இனம் ?
ஆதிப்பழங்குடித் திராவிடரை
அடுத்துத்தின்பது எந்த இனம் ?

4 வஞ்ச மும்மூர்த்திகள் எந்த இனம்?—எங்கள்
வாலியைக் கொன்றவன் எந்த இனம் ?
கொஞ்சும் குளவியும் வஞ்சமெனக் கொண்டு
கொன்றிட்ட கோட்புலி எந்த இனம் ?

5 கட்டைவிரல் கேட்ட தெந்த இனம் ?—தாயின்
கழுத்தை வெட்டிய தெந்த இனம் ?
குட்டைகுளப்பியே எங்கள் முன்னோர்களைக்
கோமாளியாக்கிய தெந்த இனம் ?

6 அய்வரின் தேவியைப் பத்தினியாக்கிய
அற்பர் வதிந்தது எந்த இனம் ?
பொய்கையில் நீராடும் மாந்தர் துகில்களைப்
புன்னையில் வைத்தது எந்த இனம் ?

7 சொந்த நாடில்லாத தெந்த இனம் ?—மதச்
சூழ்ச்சி நிறைந்தது எந்த இனம் ?
மூந்தைவினையென்ற தெந்த இனம் ?
மோட்சத்தைக் காட்டிய தெந்த இனம் ?

8 முனகிப் புழைப்பவ ரெந்த இனம் ?—நாட்டில்
மூடவித்திட்டவ ரெந்த இனம் ?
கனக விசயர்க ளெந்த இனம் ?—அண்ணல்
காந்தியைக் கொன்றவன் எந்த இனம் ?

பகுத்தறிவைக்கண்டு பதறி அழுதிடும்
பஞ்சாங்க இந்துவே சீக்கிரத்தில்
உகுத்திடு வாய் கண்ணீர் உண்மை இதை நெஞ்
உணர்ந்து நடந்துகொள் எச்சரிக்கை! [சில்

ல. ரூ. ந.

அடுத்த வாரம்

விற்பனையாளர்களுக்கு அறிவிப்பு

அறிக்கை விடுத்தும் விற்பனைத் தோழர்களில் சிலர் பணம் அனுப்பாமலிருப்பதும் ஒரு சிலர் பாக்கியில் ஒரு பாகமே அனுப்பியும் வருவதென்பது மிகவும் வருந்தக் கூடிய விஷயமாகும். இந்நிலையை நாங்கள் சற்றேனும் எதிர்பார்க்க வில்லை. விரும்பவும் இல்லை அத்தகையோர் எமக்கு விற்பனையாளர்களாக ருக்கவும் இவேண்டாம்.

பிப். 5க்குள் அனுப்பியாக வேண்டுமென தெரிவித்திருந்தும் 5ம்தேதி சனிக்கிழமையாக ஏற்பட்டுவிட்டபடியினுல் எங்கள் அறிக்கைக்கு பூரா அமுலும் கொடுக்க முடியாமல் போய்விட்டது. இவ்வாரமும் எம்முடைய முடிவை தெரிவிக்க வேண்டியதாயிற்று. சிலருக்கு பத்திரிகை அனுப்பவில்லை. அவர்கள் பூரா பாக்கியும் பத்திரிகை 1க்கு நான்கணு வீதம் டிபாசிட்டும், இதிலிருந்து 7நாட்களுக்குள் கட்டினுலொழிய வேறு ஏஜண்டு நிதமிக்கப்படும். மற்றையோர்கள் ஜனவரி மாதம் முடிய பாக்கி பூராவையும் 17.2.49க்குள் எமக்குச் சேரும்படி அனுப்பாவிடில் அடுத்த வாரத்தினின்று பத்திரிகை நிறுத்தப்படும் என்பதைக் கண்டிப்பாக அறிய வேண்டியது. பட்டியல் அனுப்பப்படமாட்டாது.

அத்தகையோர்கள் எவ்வித காகிதம் எழுதினுலும் கவனிக்க மாட்டோம். நிர்வாகி.

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

ஆசிரியர் உடுமலை B. இரங்கநாதன்

வாரப்பதிப்பு.

சென்னை	சனி	12-2-49

தண்ணீர்க் கஷ்டம்

எங்கும் மழை பெய்யவில்லை. எங்கும் தண்ணீர் கஷ்டம். உண்ண உணவில்லலாவிடினும் குடிக்கத் தண்ணீரும் உட்கொள்ளக் காற்றும் இருந்தால் சில நாள் ஜீவிக்கலாம் என்றே பதறுவர் ஏழைகள். அத்தண்ணீருக்கும் கஷ்டம் ஏற்பட்டுவிட்டாற் போலும். சாதாரண மனிதனிலிருந்து ஆட்சியாளர் வரை ஒவ்வொருவரும் தத்தம் கவனத்தைச் செலுத்தியாக வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதை எவரும் மறுக்க முடியாது.

பொது மக்கள் தம்மால் கூடிய வரை சிக்கனத்தைக் கையாள வேண்டும். ஆட்சியாளர் கஷ்டத்தைத்தீர்க்க வழிகளைக் காண வேண்டும். இவ்விருசாராரும் ஒன்று பட்ட மனமும் கூட்டுறவு வேலையும் இல்லாவிடின், இப்போதிருக்கும் நிலைமையில், யாவரும் பாம்பின் வாயில் கிடைத்த தவளை போல் கஷ்டப்படவேண்டியே யேற்படும் என்பது யாவரும் அறிந்ததே.

இச் சென்னையும் இக்கஷ்டத்துக்கு விலக்கல்ல. ஆழந்தெரியாமல் காலை விட்டுக்கொண்டு அவதிப்படும் ஸ்தாபனங்களில் சென்னைக் கார்ப்பரேஷனும் ஒன்று என்பதை இதன் முன் எத்தனையோ முறை எடுத்துக் காட்டி வந்திருக்கிருேம். வெளி ஆடம்பரங்களுக்குக் குறைச்சலில்லை. ஆனல் உள்ளுக்குள்ளோ புண்ணும் சிரங்கும் சொறியும். இது தான் நிலை. சென்னையில் குடித் தண்ணீருக்கும் கஷ்டம் ஏற்பட்டதற்குக் காரணம் மழை இல்லாமல் பொனது மாத்திரமல்ல. கார்ப்பரேஷன் முன் யோசனையுடன் வேலை செய்யத்தவிர்ந்ததுவும் பல காரணங்களில் ஒன்ருகும். இதைப்பற்றி எழுதப்புகின் நாவிதன் குப்பையைக் கிளறினதேயாகும். அவ்வேலையில் முனைந்து நிற்பதில் காலமே வீணுகும்.

கார்ப்பெரேஷன்ஸ்தாபனத்தால்ஒரு சிலருக்காவது நன்மையோ, லாபமோ அனுகூலமோ இருக்கத்தான் செய்யும். அதை நாம் பொருட்படுத்தவில்லை. கார்ப்பெரேஷன் கட்டிடம் நிழல் பட்டதும். "அடா" என்ற சொல் மாறி "அண்ணு" என்ற அளவுக்கு ஒரு வகையும் வழியுமாக ஏற்படுவதை நினைக்க பொருமையும் கொள்ளவில்லை. இதைப்பற்றி நாம் விரிவுரை நிகழ்த்தவோ மதிப்புரை எழுதவோ தேவையில்லை. வரிகொடுப்போர் ஒவ்வொருவரும் இதை நல்ல வண்ணம் அறிந்து வரிகொடுக்கும் போதெல்லாம் இரத்தக் கண்ணீர் சொட்டுகிருர்கள் என்பதை மாத்திரம் எடுத்துக் காட்ட விரும்புகிருேம். கார்ப்பெரேஷன் உத்தியோகஸ்தர்களுக்கு மாத்திரமல்ல, கௌன்சிலர்களுக்கு மாத்திரமல்ல ஆனல் ஆட்சியாளருக்குங்கூட.

சுய சுகசேமிப்புத்திட்டங்களுக்கும் தான் என்ற அகம்பாவத்துடன் அலைவதற்கும் சமயம் இதுவல்ல. ஒவ்வொரு வரும் முனைந்து நின்று தண்ணீர் கஷ்டத்தைத் தீர்த்து வைத்தாக வேண்டும். இல்லையேல் யாரும் பழிக்கு ஆளாவதுடன் கஷ்டங்கள் பலவும் ஏற்படும். இதை காங்கிரசும் மனதில் வைத்தாக வேண்டும். எரிந்து கொண்டிருக்கும் கொள்ளி கொழுந்து விட்டெரிய எண்ணை விடும் நிலையை ஏற்படுத்திக் கொள்வது புத்திசாலித்தனமல்ல வென்று எச்சரிக்க விரும்புவது மாத்திர மல்ல எங்களுடைய கடமை யென்றே நினைக்கின்ருேம். ஆதலால் இதை மிக மிக கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிருேம்.

இத்தண்ணீர் கஷ்டமானது இந்தியாவில் மாத்திரமல்ல அங்கிய நாடுகளிலும் இருக்கத்தான் செய்கின்றன. ஆனல் தீர்கக் கைக்கொள்ளும் வழிகள்தான் வித்தியாசம். அங்கியரின் முயற்சி, அங்கிய நாட்டின் முயற்சி சிறப்புக் குரியதாகும் என்பதில் கடுகளவேனும் சந்தேகமேயில்லை.

ஆனல் இக்காட்டினரின் முயற்சியோ இகழ்ச்சிக் குரியவை என்று காம் சொல்ல விரும்பாவிடினும் பரிகாசத்துக்கும் சிரிப் புக்கும் உரியதென்றே சொல்ல நாம் பின்வாங்க வேண்டியதில்லை. "மந்திரத்தால் மழை பெய்யுமா" என்பதை இவ்"வணு குண்டு" காலத்திலேனும் அறிந்து கொள்ள வேண்டியிருக்க அதை விடுத்து மழை பெய்ய வைக்க எல்லா கோயில்களிலும் தூப தீப ஆராதனைகள் நடத்த வேண்டும் என்று எண்டோ மெண்டு போர்டர் உத்திரவிட்டிருப்பதை நேயர்கள் தெரிந்திருப்பார்கள் என்றே நம்புகிருேம். பிற நாடுகளில் செயற்கை முறையால் எவ்விதம் மழையைப் பெய்ய வைப்பது என்ற ஆராய்ச்சியில் முனைந்து நிற்கையில், துரிதமாக வேலைக்கு மேல் வேலை செய்து கொண்டிருக்கையில் நம் நாட்டில் எல்லாக் கோயில்களிலும் மணி யாட்டிக் கொண்டிருக்க வேண்டும் எனசட்டளையிட்டிருப்பது சென்று போன ஒரு நிகழ்ச்சியை நம் கவனத்துக்குக் கொண்டுவருவதாக இருக்கிறது.

சில நாட்களுக்கு முன்னர் இதே சென்னைக்கருகில் ஒரு கிராமத்தில் சில கிழவிகள் மழையைக் கொண்டுவர அவ்வூருக்கருகிலுள்ள ஒரு குளக்கரைக்குச் சென்று, மாரடித்து ஒப்பாரியிட்டனராம். இதில் எவ்வளவ புத்திசாலித்தனமும் முற்போக்கும் அடங்கியிருக்கிறதோ அவ்வளவே போர்டரின் இவ்வுத்திரவிலும் அடங்கியிருக்கிறதென்பதை ஆஸ்திகர்கள் என்போரும் ஒத்துக்கொள்வார்கள் என்ருல் இனி பகுத்தறிவாளர்களைப்பற்றியும் நாஸ்திகர்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டிய அவசியமே இல்லைவில்லை. வாசகர்களே முடிவு செய்து கொள்ளட்டும்.

இது சமயத்தில், எது எப்படியிருப்பினும், இது விஷயமாக டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி அவர்களைப் போற்ருமல் இருக்க முடியாது. டாக்டர் அவர்கள், தண்ணீர் கஷ்டத்தைத் தீர்க்க வழிகளைக் காண வேண்டுமென்ற அவாவுடன் திருவள்ளுரையடுத்த கரிகிளவாக்கம் கிராமத்துக்குச் சென்று அவ்வூரின் பிரபல மிராஸ்தாரான தோழர் சி, வேலாயுத முதலியாரவர்களைச் சந்தித்தும், கலந்து பேசியதின் விளைவாய் செங்குளத்திலிருந்து 15 வது மைலில் இருக்கும் காட்டங்கல் என்ற இடத்தில் வற்ருத தண்ணீர் ஊற்றுக்கள் எண்ணற்று இருப்பதாகவும், காட்டங்கல் பரப்பில் பல கிணறுகள் தோண்டி அவ்வூற்றுக்களைப் பயன்படுத்தின் மக்களின் உபயோகத்துக்கென சுமார் 200 லக்ஷம் (2 கோடி) கேலன் தண்ணீர் கிடைக்குமென்றும், அவ்வூற்றுக்களை செங்குளத்துடன் செங்குளம் - திருவள்ளூர் ரோடின் மேல் புரமாக புது வாய்க்கால் வழியாக பிணைக்கச் செய்ய முடியுமென்றும், இதற்கு கேவலம் ரூ 50000 மாத்திரமே செலவழியும் எனவும் தெரிவிப்பதை நாம் மிகவும் பாராட்டுகின்ருேம் என்பது மாத்திரமல்ல, வரவேற்கின்ருேம் என்பது மாத்திரமல்ல, ஆனல் கார்ப்பொரேஷனும், ஆட்சியாளரும் உடனடியாக ஊன்றிக் கவனித்து, பரிசீலனை செய்து தக்கதைச் செய்து மக்களின் கஷ்டத்தைத் தீர்க்க வேண்டுமென மிகவும் கேட்டுக் கொள்ளுகின்ருேம். மக்களின் விருப்பமுமாகும்.

டாக்டர் அவர்களின் நன் முயற்சி நலம் பெற வேண்டுமென்பது எம் களங்கமற்ற அவா. டாக்டர் அவர்கள் தன்னைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்களான சென்னை பெரியமெட்—ருளை வாசிகளுக்குக் காட்டியாக வேண்டிய நன்றியுமாகும் என்பது ஒரு புறமிருக்க அதே வாக்காளர்களின் அன்பையும் ஆதரவையும் இனியும் பெருமிதத்தில் அடையும்படியான நற்சந்தர்ப்பத்தையும் அடைந்து விட்டார் என்பதில் ஐயமில்லை என்ருலும், டாக்டர் அவர்கள் இதிலிருந்தேனும், தவிரா ஊக்கத்துடனும், அஞ்சா நெஞ்சுடனும், முன் குதித்து நற்சேவை செய்து, மக்களுக்கு நற்பணியாற்ற [illegible] மென பொது மக்களும் குறிப்பாக பெரியமெட்டு வாசிகளும் மிகவும் எதிர்பார்க்கிருர்கள் என்பதை நாம் எடுத்துக் காட்டாவிடில் எம்முடைய கடமையிலிருந்து தப்பியவராவோம்.

****

வ. உ. சிதம்பரனுர்

"வி. ஓ. சிதம்பரம்" என்ற பெயரால் கப்பல் மிதக்கவிடப்பட்டது ஒவ்வொருவரின் பூரிப்புக்கான விஷயம். சகலத்தையும் இழந்து, நாட்டின் நலனே பெரிதனக்கருதி. சுகபோகங்கள் அனைத்தையும் விடுத்து, சிறைச்சாலையில் அவதியுற்று, மனைவி மக்கள் வறுமையில் உழல, இயற்கையெய்தின வீர சிதம்பரனுரின் பெயர் மறக்கப்பட்டும், மறைக்கப்பட்டும், வந்தும், பல பேர்களைக் கொண்ட பல கப்பல்கள் எற்கனவே ஓடவிட்டும், இப்போது சிதம்பரனுர் பெயரில் ஒரு கப்பலும் ஓட்டுவதாயிருந்தால், ஓட்டியாக வேண்டிய அவசியம் எற்பட்டதென்ருல், இவ்வெற்றி திராவிட கழகத்திற்கே உரியதல்லாமல் வேறெவருக்கு உரியதாகுமென்றே மக்கள் சிந்தித்துப் பார்க்கட்டும். பெயரைச் சூட்டிவிட்டதனுலேயே ஒரு பெருங்காரியம் சாதித்து விடதகாது. வறுமையில் கிடந்துழலும் அவரின் குடும்பத்துக்கு ஒரு தக்கபண முடிப்பு கொடுக்க முன் வருவார்களா இத்தேசாபிமானிகள் என்போர்?

****

காந்தியார் கொலை வழக்கின் தீர்ப்பு

காந்தியார் அவர்களின் கொலைக் குற்றத்தைச் செய்த கயவர்களுக்கு விடுதலையிலிருந்து மரணதண்டனை உரைக்கும் தீர்ப்பளிக்கப்பட்டு விட்டதானுலும் இத்தீர்ப்பே முடிவாக இருக்க முடியுமென்று எண்ண முடியாமல் அப்பீலும் இருப்பதாகத் தெரிவதாலும், அப்பீலே செய்யா விடினும் தீர்ப்பை மேலிடத்தாரோ அல்லது மற்றையோரோ கவனிக்க வேண்டியிருப்பதாலும், குற்றவாளிகளும் வெளி வரும்போது இட்ட கோஷங்களும் அர்த்த புஷ்டி கொண்டவைகளை இருப்பதாலும், இதை ஊர்ஜிதம் செய்யும் வகையில் விசாரனை காலத்தில் எதிரிகள் தரப்பில் அநேக சாட்சிகளும், ஆதரவுகளும் திரட்டப்பட்டன வென்பது ஒன்று, அதற்குத் தகுந்தாற்போல் கோர்ட்டில் கோட்ஸே கொடுத்த வாக்கு வேதத்தை வெளியிடவில்லை என்பது மற்ருென்று இவைகள் எற்பட்டதிலிருந்தும் இப்போது எற்பட்ட தீர்ப்பு முடிவாயிருக்க முடியாது "தவலை" "தலை" யாகத்தான் மாலுகி அல்லது "தலை" "தவலை" யாகத்றதோதான் மாறுகிறதோ யார் அறிவார், நாம் அறிய?

****

இது உண்மையா ?

கார்ப்பொரேஷன் அதிகாரிகளுக்கும், கௌன்சிலர்களுக்கும், ஆட்சியாளருக்கும் தெரியுமா ?

குட்டிச்சாத்தானே நீ தான் சொல்லவேண்டும்.

1. கார்ப்பொரேஷனின் எல்லைக்குள் ரோடுகளைச் செப்பனிட உப்பரவ குலத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் அமர்த்தப்பட்டிருப்பது உண்மையா ?

2. இவர்களுக்கு மாதச்சம்பளம் என்பது உண்மையா ?

3. இவர்களின் வேலையை மேல்பார்வை பார்க்க மேஸ்திரிகள் நியமிக்கப்பட்டிருப்பது உண்மையா ?

4. மேஸ்திரிகளையும் வேலை ஆட்களையும் எவ்வித (Trasfer) மாற்றலும் இல்லாதபடி ஒரே இடத்தில் வேலை செய்யும்படியாக விட்டு வைத்திருப்பது உண்மையா ?

5. மேஸ்திரிகளில் சிலர் காம விளையாட்டுகளில் (வேலைசெய்யும் உப்பரவ பெண்களுடன்) ஈடுபட்டிருப்பது உண்மையா ?

6. மேஸ்திரிகளின் இஷ்டத்துக்கு இணைந்துவிட்டால் அப்பெண்கள் வேலையைக் கவனிக்காவிடினும், வேலைக்கே வராவிடினும் சரியே ஆஜர் போட்டு வருவது உண்மையா ?

7. மேஸ்திரியின் நட்பை அடைந்த அப்பெண்கள் கணவன்மாரை சட்டை செய்யாமல் அலக்ஷியப்படுத்தி வருவது உண்மையர ?

8. கணவரில் சிலர் மனையாள் மலையேறி மேய்ந்தாலும் மேஸ்திரி தயவு இருந்தால் போதுமென உடந்தையாயிருந்தும் வேலையைக் கவனிக்காமலும் கார்ப்பொரேஷனின் செல்லப் பிள்ளைகளாக வளர்ந்து வருவது உண்மையா ?

9. இதற்கு இடங்கொடுக்காதவர்களை, அவர்கள் வேலைக்கு வந்தும் வேலையைச் சரியாகச்செய்தும், அவர்களை ஆப்செண்ட் (Absent) போட்டுவிடுவதாக மிரட்டுவது உண்மையா ?

10. வயதானபெண்களும் அவர்களைப் போன்ற ஆண்களும் தத்தம் சம்பளங்களிலிருந்து மாதம் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் பிரதிமாதமும் வசூலிக்கப்படுவது உண்மையா ?

11. இந்த மேஸ்திரிகள் அட்டூழியங்களால் பல குடும்பங்களில் கலவரங்கள் ஏற்பட்டு, கணவனிடமிருந்து விலகி மேஸ்திரியின் தயவால் தனித்து வாழ்கின்றனர் என்பது உண்மையா?

12. சில நாட்களுக்கெல்லாம் அம்மேஸ்திரிகளும் கையை விரித்துவிட்டு, கவனத்தை புதிதே சேர்ந்தவர்களிடம் செலுத்திவிட, முந்திய பெண்கள் எக்கதியும் இல்லாமல் நிர்க்கதியாக்கப் படுகின்றனர் என்பது உண்மையா ?

13, மேஸ்திரிகளால் கைவிடப்பட்டு, கணவர்களால் வெறுக்கப்பட்டு, விபசாரிகளாகத் திரிய வேண்டிய நிலை பல சமயங்களிலும் ஏற்பட்டிருப்பது உண்மையா ?

14. இந்தக் கேவலமான நிலை ஏற்படுவதற்குக் காரணம் மேஸ்திரிகளே யாவர் என்பது உண்மையா ?

15. நெய்யிற்குத் தொன்னை ஆதரவு, தொன்னைக்கு நெய்யாதரவு என்றபடி மேஸ்திரிகளுக்கும் கன்ட்ரேக்டர்களுக்கும் தொடர்பு இருப்பது உண்மையா ?

16. இதனாலேயே அனுமதிக்கப்பட்ட பணம் பூராவும் அவ்வந்த வேலைக்கு செலவழிக்க முடியாமற் போய், குறிப்பிட்ட வேலை அரைகுறையாக முடிவதும்,, சீக்கிரமே பழுதுகள் நேரிடுவதும், அவைகளைச் சீர்படுத்த விசேஷத் தொகைகள் மறுபடியும் செலவழித்துச் செப்பனிட அனுமதிப்பதும், இதனாலேயே மக்கள் அதிகமாக வரிகள் கொடுக்க வேண்டி ஏற்பட்டும், கொடுத்து வந்தும், கோரிய பலன் கிடைக்கவில்லை என்பதும் உண்மையா?

17. அடிக்கடி கடன்கள் கொடுத்துதவிவரும் சர்க்கார். கார்ப்பொரேஷனால் ஒவ்வொரு இனத்துக்கும் செலவழிக்கப் பட்டதாகக் காணப்படும் தொகை அவ்வேலைக்கே செலவழிக்கப்பட்டது, தொகைக்குத் தக்க கட்டிடம் மராமத்து வேலை, முதலியவைகள் ஏற்பட்டிருக்கின்றனவா என்பதை அவ்வப்போது ஒவ்வொரு விஷயத்திலும் கண்டறிந்து கொள்ளத் தவிர்ந்து விட்டனர் என்பது உண்மையா ?

18. கூட்டல் பெருக்கல் அளவில் மாத்திரம் நில்லாது சகல துறைகளிலும் ஊன்றிக் கவனிப்பின் குட்டும் வெளிப்படும், மக்களின் வரிப்பணமும் மிச்சமாகும், கட்டப்பட்ட அல்லது பழுது பார்க்கப்பட்டவைகளும் உறுதியாக இருக்கும் என்பது உண்மையா ?

19 கன்ட்ரேக்டர்களின் பில்லுகளின்படி சாமான்கள் வந்து சேராவிடினும் பில்லுகளில் கண்டுள்ள தொகைகளில் மாத்திரம் ஒரு தாம்பூரக் காசும் குறைவதில்லை என்பது உண்மையா ? “ குண்டாந்தடி”

வரப்பெற்றோம்
திருக்குறள் தெளிவு.

மாதம் இருமுறை—விலை அணா—ஒன்று ஆசிரியர் வித்துவான் சுந்தர - சண்முகனார் பதிப்புரிமை பைந்தமிழ்ப் பதிப்பகம். 61 பி வைசியா தெரு புதுவை.

சூத்துக்காட்டிப்பட்டி

இது தென் ஆர்க்காடு ஜில்லாவில் இருக்கும் ஓர் ஊரா?
இவ்விபரீத பெயர் ஏன் ?

உண்ணாவிரத பூச்சாண்டி

ஐயா கணபதி ஐயரே க்ஷேமந்தானே. இருக்கட்டும். இது சமயத்திலே உம்மை தொந்தரவு செய்வதை விரும்பவில்லை. ஆனால் ஒன்றே. இதை மாத்திரம் சொல்லிவிட்டால் போதும். அங்கச்சியம்மாள் என்பது யார்? அங்கச்சியம்மாள் உம்மிடம் சேலை எடுத்துக் கொடுக்கவேண்டும் எனக் கேட்டதற்குக் காரணம் என்ன? தாடி வைத்துக் கொண்டிருந்த காலத்தில் அறிமுகமான அங்கச்சியம்மாள் தாடி நீக்கிய காலத்தில் துரத்தப்பட்டாள் போலும். என்ன விஷயம் என்பதை அடுத்த வாரத்திற்குள் தெரிவிக்காவிடில் குட்டிச்சாத்தானுக்கு விண்ணப்பம் செய்யப்படும். இதைக் கண்டிப்பாகத் தெரிந்து கொள்ளவும். சரஸ்வதியிலும் சரஸ்வதி, மூக்கில் புழுத்த சரஸ்வதி பொலல்லவா இருக்குது காரியங்களெல்லாம்.

“ குண்டாந்தடி ”

எல்லவரும் இன்புற்றிருக்க வேண்டும்

உடுமலை பீரங்கி

பிரதி சனிக்கிழமையும் வெளிவரு

சந்தா விவரம்

தனிப் பிரதி	ரூ.	0—1—0
6 மாதங்களுக்கு	ரூ.	2—8—0
1 வருஷத்திற்கு	ரூ.	4—0—0

6 மாதத்திற்குக் குறைந்த சந்தா இல்லை.

காரியாலயம்
33, திருவேங்கிட முதலித் தெரு
பெரியமெட்டு. சென்னை. 3.

எல்லா ஊர்களிலும்

ஹிக்கின்பாதம்ஸ் ரைல்வே புக் ஸ்டால்களிலுங் கூட கிடைக்கும்

விளம்பர விகிதங்களுக்கு எழுதவும்.

குன்னூர், 8-2-49 பொங்கல் விழா கூட்டம் குட்டி கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம், தோழர் தி, பொ, கோவிந்தராசன் பொங்கல் விழாவைப்பற்றி பேசினார், பிறகு கோவை புலவர், நண்ணன் அவர்கள் தமிழர் விழாவும் திருக்குறளை பற்றியும் சொற்பொழிவாற்றினார், 4–30 மணிக்கு துடங்கி இரவு 8மணிக்கு தலைவர் நன்றி கூறி கூட்டம் இனிது முடிவடைந்தது.

டெலிபோன் : 86726

நியூடன் அண்டு கம்பெனி,

80, வாலாஜா ரோடு, மௌன்ட் ரோடு,

சென்னை 2,

கண்ணுக்கினிய எங்கிரேவிங்குகளும், சகல வித ஆப்டோன் பிளாக்குகளும், லைன் பிளாக்குகளும் ட்ரைகலர் பிளாக்குகளும், ரப்பர் ஸ்டாம்புகளும் செய்வதற்கான சிறந்த இடம். நம்பிக்கையும், புகழும் வாய்ந்த தக்க இடம்.

வெளியூர் ஆர்டர்களுக்கு பிரத்தியேக கவனிப்பு.

வேலைகிடைத்தது... ஆனால்?

மு. அ. இராசகோபால் திருப்பூர்

என்ன மீனாக்ஷி இந்தப்புள்ளே யாரு?—புதுசா இருக்குது.

அதுதான் நான் சொல்லிலீங்களா—இந்த வாரத்திலே ஒரு அம்மணியை வேலைக்கு சேத்திக்கணும்னு—அவதானுங்க இவ.

அடே வேலையில்லாத காலத்திலே என்னத்துக்கு புது ஆளு—நம்ம வேலைக்குப் புதுசா இருந்தா என்ன செய்யறது—எதுக்கும் சீசனுக்குவரச் சொல்லு.

நீங்க அப்படிச் சொல்லப்படாது—இந்தப்பக்கம் திரும்பி அவமொகத்தைத்தான் கொஞ்சம் பாருங்களேன்—பாவம்! அவள் கதையேக் கேட்டா நீங்ககூட கண்ணீர் உட்டுடுவீங்க—ஏழைங்க—திக்கில்லாமெத் தவிக்கரு......நான்தான் சொல்லிக் கூட்டியாந்தேனுங்க செட்டியாரே—.

அப்படியா... ஹாம்......நீயே இம்மட்டுத் தூரம் சிபார்சு செய்யரபோது நான் என்ன சொல்றது—உன்னிஷ்டம்போல் செய்......ஆமா......மீனாக்ஷி......அவள் கதையின்னு சொன்னயே—அது என்ன?

அதுங்களா—இவள் சின்னக் கொளந்தையா இருக்கறபோதே இவங்கஅம்மா செத்துப் போயிட்டா—இவ அப்பனும் பரதேசம் போயிட்டான்—அப்பொற—இவளுடைய பாட்டி இவளை வளர்த்தி கலியாணம் செஞ்சு கொடுத்தா—இவள் புருஷனும் இரண்டு மாசத்துக்கு முன்னாலே காச்சல் வந்து செத்துப் போனான்—கல்யாணம் செஞ்சு ஆறுமாசம் கூட வாழல்லீங்க

அடபாவமே! சொத்து கித்து உண்டா......

ஹா ஹா ......அது இருந்தா இங்கே ஏன் வர்ராளுங்க—இவளும் இவபாட்டியுந்தா இருக்கருங்க வேறு போக்கிடம் இல்லீங்க—திக்குமில்லே பக்கத்து வீட்டிலே குடியிருந்தா—சமாதான்ம் சொல்லி வேலை வாங்கித் தர்ரேன்னு கூட்டிவந்தேனுங்க.

புருஷன் செத்துப் போனாங்கரயே செகப்புச் சேலை கட்டியிருக்குதே!

அவுங்க சாதியிலே கட்டிக்கலாமுங்க, நகை நட்டுத்தான் போடமாட்டாங்க.

அதைப்பத்தி என்ன—நம்ம வேலைக்கு லாயக்கா இருந்தாத்தானே கூலி தரப்போறோம். ...வேலைக்குப் புதுசு—இன்னிமேத்தானே பழகணும்.

அதெப்பத்தி உங்களுக்கு கவலை வேண்டாங்க—நான் பாத்துக்கறே—கொட்டெ பொருக்கரவேலை இல்லாட்டா ஆபீஸ் வேலை செய்யட்டுங்களே—உங்களுக்கும் கைவேலைக்கு ஒரு ஆளுவேண்டியது தானுங்க—புதுசானாலும்—பழக்கத்துக்குச் சரியாயிடும்.

உனக்கு நான் சொல்லனுமா என்ன—நம்ம மாடி ரூமெப் பெருக்கி படுக்கையைப் போடச்சொல்லு.

பகல் போஜனத்துக்குப்பின் படுத்து. தங்குவது பட்டை நாமப் பருவதஞ் செட்டியாருடைய பழக்கம், வழக்கமுங்கூட. பெரிய பஞ்சு பருத்தி வியாபாரி கொஞ்சம் வயது கூடியிருந்தாலும் ஆடம்பர அலங்காரங்களுக்குக் குறைவில்லை, தன் ஆபீஸில் கூலிவேலைக்கு வரும் ஏழைப் பெண்களை தன் இஷ்டத்துக்கு இணங்கும்படி செய்து அவர்களுடைய வறுமையையும் ஏழ்மையையும் உபயோகித்துத் தன் வாலிப உணர்ச்சியைத் தீர்த்துக் கொள்ளும் உல்லாச புருஷன். "கடவுளுக்குக் கண்ணில்லை" என்பார்களே—அது என்னவோ உண்மைதான் இந்தக்கயவர்களுக்குக் காசையும் கொடுத்து அவர்களின் கயமைத்தன்மைக்கு தன் திருநாமத்தையும் தரித்துக் கொள்ள அனுமதிக்கிருரல்லவா?

எட்டுவிரல் கடையளவு கோணல் இல்லாமல் ரசமட்டம் வைத்துப் போட்ட நாமம் பரந்தகன்ற நெற்றியை அலங்கரிக்க, துளசிமணி தோளில் துவழ, அடங்காத ஆசையெண்ணம் அகத்தில் கொள்ள, கண்ணின் கடையிலே காமவிஷம் பொங்க, கருணையளிப்பவன் போல் இளங் கன்னிகளின் கற்பை அழிக்கும் கள்வன்.

வறுமையும் வாலிபமும் நிறைந்த வனிதையரும்—உல்லாச வாழ்வு படைத்த உலுத்தர்களும்—உடைந்தையாக வேலைசெய்யும் விஷப்பூச்சிகளும் இருக்கும் பொழுது பருத்தி ஆலைகள் வியாபார நிலையம் என்ற நிலைமாறி, விபசார மடமாக மாறுவதில் வியப்பில்லையல்லவா?

ஆபாசமான வேலைக்கு ஆட்கள் தயார் செய்து கொடுக்கும் வேலை செய்பவள்தான் அவரின் ஆபீஸ் பெண்கள் டிபார்ட் மெண்டின் மேஸ்திரி மீனாக்ஷி. வறுமையினால் வாட்டப்பட்ட ஏழை வீட்டு இளம் பெண்களையும்—கைம்மையான கன்னிகளையும்—ஆதரவற்ற அனாதைகளையும்—காமக் கேளிக்கைக்கு ஈடுபடுத்தும் கைங்கரியத்தைச் செய்து முதலாளியைக் கைக்குள் வைத்திருப்பவள்—பழகாத—புதிதானவர்களிடம் பலவிதமாக விளையாட்டாகவும் வினயமாகவும், பணத்தைக் காட்டியும் பகட்டாகப் பேசியும் பலவிதத்திலும் சமயா சமயம் அறிந்து காரியம் செய்யும் கைகாரி. இணங்காததற்கு இடமில்லை இங்கு—அடங்காததை அகற்றி விடுவாள். அவளுக்கு என்னவேலை அங்கே!

முல்லைக்கொடி, முத்துப் பற்கள், மோகனவடிவம்—கவர்ச்சி தரும் அங்க அமைப்பு—கட்டாந்தரையில் விழுந்த கொழுக்கெ"ம்பற்ற கொடி கவனிப்பாரற்று கருகிய மொட்டு, கைம்மையான காமாக்ஷி. இவளின் ஏழ்மையையும் இளமையையும் கண்டாள் மீனாக்ஷி. திக்கற்றநிலைமையை எடுத்துக் காட்டி வருமானம் இருந்தால் வறுமை ஓடும் என்று வார்த்தைகள் பல சொல்லி இந்த உல்லாச புருஷனிடம் அழைத்து வந்தாள் வேடன் வலையில் விழுந்த மான்—தப்ப வகையுமில்லை, தரணியில் தன் மானத்துடன் வாழ வழியுமில்லை. தன்னை அன்புடன் வளர்த்த வயது கடந்த பாட்டியை யெண்ணி—இவ்வுலகில் வாழவே எண்ணினாள்—வகையின்றி வந்து சேர்ந்தாள். கஷ்டப்பட்டாகிலும் காலத்தைக் கடத்தலாம் என்பது காமாக்ஷியின் எண்ணம்......ஆனால்... கஷ்டமில்லாமல்...கற்புக்குப் பங்கமான காரியம் செய்யத் தூண்டினாள் மீனாக்ஷி.

செட்டியார் நல்லவர்தானா அக்கா! இது காமாக்ஷி மீனாக்ஷியைக் கேட்ட கேள்வி.

அவரப்போல இந்த உலகத்திலே காண முடியுமா? மனம் வைச்சாரனா வாரி வாரிக் கொடுப்பாரே—ஆமா—என்ன சமாச்சாரம்—மாடி ரூமெக் கூட்'' யாச்சா.

ஆச்சு அக்கா—அவரு பாக்கர பார்வையும் பல்லைக் காட்டறது—நடக்கறதும்—ஐயோ! அக்கா!! எனக்கு என்னமோ பயமாகத்தான் இருக்குது. என் ஒடம்பு என்னமோ செய்யுது.

என்ன செய்யுது—புது இடம்பாரு. புதுமனுஷரைக் கண்டா அப்படித்தான் இருக்கும் உன்னைப் பார்த்தா பாவமா இருக்குதே, சின்ன வயசுலே தாலியறுத்தூட்டு என்னமா மனசை அடக்கி இருக்கு தோணு, உம் மேலே கருணையாப்பாத்திருப்பாரு. இதைப்போயி......நான் கூட என்னமோன்னு நெனச்சே......இதுக்குத்தானு என்னமோ செய்யுதுன்னே... வேலைக்கு வந்த புதிசுலே எனக்குக் கூட அப்படித்தான் இருந்தது. இப்ப சரியாய் போகலையா—உனக்கும் அப்படித்தான். அதெல்லாம் பழகப்பழக சரியாப்போயிடும்.

இதபாரு—உனக்காக கஷ்டமில்லாத வேலையை செட்டியாருகிட்டச் சொல்லி வாங்கித் தந்திருக்கறேன்—உன்னிலைமை எல்லாம் சொன்னேன். நீ சொன்னயே கொஞ்சம் கடனிம் செயின்னு அதைக் கூடச் சொன்னே.

அதுக்கு செட்டியாரு என்ன அக்கா சொன்னரு,

என்ன சொல்வாரு! பாவம்! சின்னப்பொன்னு, அதுக்கு கஷ்டமான வேலை கொடுத்துக் கசக்க வேண்டாம்னுட்டாரு.

அப்படின்னா எனக்கு என்னவேலை?

தினமும் ஆபீஸ் ரூம் பெருக்கி வைக்கனும். காபி வெத்தலை வாங்கி வரனும். மத்தியானம் மேல் மாடியில் செட்டியாருக்குப் படுக்கை போடனும். அவர் எழுந்ததும் டிபன் காபி கொண்டுவந்து தரனும். இதுபோக அப்பொ அப்பொ அவர் சொல்ற மாதிரி நடக்கனும்...வேலை ஒன்றும் கஷ்டமில்லை. நீ மட்டும் அவர்...... உனக்கு சம்பளமும் கூடும். செட்டியாரு உம்மேலே உசிரா இருப்பாரு. அவரு நல்ல தங்கமான குணம், இளகின மனசு.

இது எல்லாம் ஒரு கஷ்டமான வேலையா? கூட்டிவந்து வேலை வாங்கித் தந்த உனக்கு கெட்டபேர் வரும்படி நடப்பேனா? ஏன் அக்கா நீயே சொல்லு.

இந்தா பத்து ரூபாய் உன் கடனிம்சையைத் தீத்துக்கோ இதுகூட அவர்தான் கொடுத்தாரு—உன்னிலைமையைக்கண்டு, அவர் மனசு உம்மேலே இளகிப்போச்சு.

முன் பின் தெரியாத என்னை நம்பி பத்து ரூபாய் கொடுத்தாரா?

என்ன இருந்தாலும் அவர் நல்ல மனுஷன்தான் இல்லையா அக்கா!

அதையே நான் ஏ சொல்லனும் போகப் போக நீயே தெரிஞ்சுக்குவே.

நம்மனாலே என்ன நடக்கும்? எல்லாம் பொன்னியாத்தா புண்ணியம்.

பொன்னியாத்தோ, புண்ணியமில்லே அம்மணி இதுகன்னியாத்தா கடாட்சம்னு சொல்லு.

அக்கா எல்லாம் உன் தயவு தான்—என்னமோ சோசியன் சொன்னப்லே—இதுவரைக்கும் கெட்ட காலமா இருந்துது—இனிமேலே நல்ல காலம் வருமுன்னு சொன்னான்—ஒரு பெரிய மனுசரு ஒத்தாசை (ஒத்த—ஆசை) செய்வாருன்னு, நேத்துங் கூட சோசியகாரன் சொன்னான்—அது சரியாத்தான் போச்சுது!

"திராவிட நாடு திராவிடருக்கே" என்ற இரட்டைக் கொடியுடன்,

பெரியார்--அண்ணா--பாரதிதாசன்--பன்னீர்செல்வம்

படம் தனித்தனியாக அச்சடிக்கப்பட்டிருப்பது.

கழகங்கள்--படிப்பகங்கள்--தனித்தோழர்களுக்கு மிகவும் உதவியாய்

அழகிய முறையில் அமைந்தது.

1.	லட்டர் பேப்பர் கூ x ருஇ அளவு	எண் 16	க்கு	அணா	8.	இம்மூன்றிலும் தங்கள் பெயர்களை அச்சடிக்க அஞ்சல் எழுதுங்கள்
2.	கவர் சுவ x 3ளு	... 16	,,	,,	8.	
3.	கார்டு	... 16	,,	,,	6.	
4.	கார்டு சைஸ் அச்சுப்படம் நால்வரிலும்	... 16	,,	ரூ	1.	
5.	அண்ணா-கவிஞர் சேர்ந்த சைஸ் அச்சுப்படம்	... 16	,,	,,	1.	
6.	லேபிள் சைஸ் அச்சுப்படம் நால்வரிலும்	... 16	,,	அணா	2.	
7.	கார்டு சைஸ் புகைப்படம் நால்வரிலும்	... 1	,,	,,	8.	
8.	அண்ணா-கவிஞர் சேர்ந்த புகைப்படம் கார்டு சைஸ்	... 1	,,	,,	8.	
9.	வ. உ. சிதம்பரனார் புகைப்படம் ,,	... 1	,,	,,	8.	
10.	'திராவிடநாடு திராவிடருக்கே' 18 இஞ்சு	... 16	,,	,,	12.	
11.	லட்டர் பேப்பர்-நால்வர் படத்துடனுள்ளது	16	,,	,,	12.	(3 கலர் கொண்டது)

ரூபாய் ஐந்துக்குக் குறையாத ஆர்டர்களுக்கு அனுப்பும் சிலவு இனம். மற்றும் குறைந்த ஆர்டர்கள் ரூபாய் ஒன்றுக்கு அணா இரண்டு வீதம் தபாற் சிலவு சேர்த்து அனுப்ப வேண்டும். வி. பி. இல்லை. முன் பணம் அனுப்பினால் மட்டும் கவனிக்கப்படும்.

திருக்குறள் நிலையம், திருநெல்வேலி சந்திப்பு.

தூத்துக்குடியில் சிதம்பரம்

தூத்துக்குடி பா. ரத்தினசாமி

தூத்துக்குடியில் சிதம்பரம். ஆம் தூத்துக்குடியிலே பிறந்த வ. உ. சிதம்பரனார்தான். கப்பலோட்டிய மறத்தமிழன் சிதம்பரம். ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து ஏன்? உலகவல்லரசையே எதிர்த்து திராவிடத்தின் திருநகர் ஒன்றாகிய திருமந்திர நகர் என்றும் தூத்துக்குடியிலே கப்பல் ஓட்டினார். கப்பலைமட்டும் ஓட்டவில்லை தன் வாழ்நாள் முழுவதையுமே நாட்டின் மக்களின் நல்வாழ்விற்காக தியாகம் செய்தார். தன் இன்ப சுகம், மனைவி மக்கள் நல்வாழ்வு அத்தனையுமே துறந்தார். இந்த நாட்டிற்கு இந்திய விடுதலைக்கு அடிகோலியவர்களிலே சிதம்பரமும் ஒன்று என்றால் மிகையாகாது. துணி பகிஷ்காரம் மட்டும் போதாது. ஆங்கிலேயர்களையே இந்நாட்டை விட்டு கப்பலேற்ற வேண்டும் என்று கர்ஜனை செய்தார். கதர், அகிம்சை முதலியவைகளில் நம்பிக்கையில்லாத வீரர் சிதம்பரம் தமது புரட்சிக் கருத்துக்களை மக்களிடையே அள்ளி வீசினார். எந்த நேரத்தில் என்று நினைக்கின்றீர்கள்! ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தின் அடக்கு முறைகள், அடிதடி, லத்திச் சார்ஜ், துப்பாக்கி பிரயோகங்கள் நடைபெற்ற நேரத்தில், வந்தே மாதரங்களுக்கு வாய்ப்பூட்டு போடும் நேரத்தில் அதி, தீவிரமாக காங்கிரசிலிருந்து கொண்டு ஆங்கிலேய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடினார். பஞ்சாப் படுகொலைகள் பகவத் சிங்கின் தூக்கு மேடையை நினைத்தும் பதறவில்லை. தூக்கு மேடைகள் தயாராக இருப்பதையும், பார்த்தும், கொடிகாத்த திருப்பூர் குமரன் மண்டை துப்பாக்கிக் கட்டையால் உடைக்கப்பட்டதைக் கண்டும் கலங்கவில்லை. வீரர் வ. உ. சி. காங்கிரசுக்காக உழைத்து உழைத்து உருமாறினார். ஆங்கில ஏகாதிபத்தியம் இவரை மட்டும் சும்மா விடுமா என்ன? பிடித்துக் கூண்டிலேற்றியது. வழக்கறிஞர் சிதம்பரத்தை 'உனக்கு ஜென்ம தண்டனை விதித்திருக்கிறேன்' அந்த ஏகாதிபத்திய நீதிபதியானேயின் தீர்ப்பு.

ஜென்ம தண்டனையா? எங்கள் சிதம்பரத்திற்கா? இவர் செய்த குற்றம் என்ன? இது அநீதி அக்கிரமம் என்று அன்று தமிழகம் கூறியது. ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதேச்சாதிகாரத்தை எதிர்த்துப் போராடிய வீரர் சிதம்பரனாருக்கு இருபதாண்டு ஜென்மம். இதுபோன்று காங்கிரசிலே கடும் தண்டனையானவர்கள் சிதம்பரனாரைத் தவிர எவரும் இருக்க முடியாது. இந்த நாட்டிற்கே விடுதலை அளித்த வீரர்களிலே ஒருவரான வீரர் சிதம்பரனாரை காங்கிரஸ் மறந்து விட்டது. மறைத்து விட்டது. காங்கிரஸ் ஆரிய பனிபடலங்களால் மூடப்பட்ட காரணத்தால் சிதம்பரனார் தென்னாட்டவர், தமிழன், திராவிடன் என்ற காரணத்தினால். இப்பேர்பட்ட வீர தியாகியைத்தான் பெற்று வளர்த்த தமிழகமும் மறந்துவிட்டது. எங்கோ இந்தியாவின் ஒரு மூலையில் திராவிடத்தின் ஒரு பகுதியில் ஈரோட்டிலே கிளம்பிய பகுத்தறிவுச் சூரியனால் ஆரியப் பனிப்படலங்கள் விலகலாயிற்று. உறங்கிக் கிடந்த திராவிடத்தை தட்டி எழுப்பினார் ஒரு கிழவர். தூக்கு மேடையேறிய பகவத் சிங்குகளை பக்கத்தில் கொண்டு வந்தார்! மண்டை உடைபட்டு உயிர் நீத்த திருப்பூர் குமரன்களை காட்டினார்! கப்பலோட்டிய மறத் தமிழன் வீரத் தியாகி சிதம்பரனாரை சிந்தனைக்குக் கொண்டு வந்தார். இன்று தமிழன் ஒவ்வொரு திராவிடன் மனதிலும் இடம்பெற்று விட்டனர் குமரன், சிதம்பரனார். எங்கள் மறத் தமிழன் என்று தலை நிமிர்ந்து கூறுகின்றனர். வாழ்க உங்கள் தியாகம் என்று தமிழகம் வாழ்த்தி மகிழ்கிறது. இவர்களது தியாகத்தால் விடுதலையும் அடைந்தது இந்தியா, பிடிவடவர் கைக்கு கிடைத்தது. சுதந்திர இந்தியாவிலே சுதந்திரக் கப்பலை மிதக்க விடப் போகிறோம் என்றனர். "செங்கடலில் சிதம்பரமா" என்று தலை தூக்கிப் பார்த்தது தமிழகம். பார்த்தும் தலை கவிழ்ந்து விட்டது முதல் கப்பல் 'ஜல உஷா' ஜலப்பிரபா, ஜலஜவகர் ஒன்றன் பின் ஒன்றாக மிதக்க விட்டனர். மூன்று கப்பல்களையும்! வஞ்சகம் செய்து விட்டனர். வடநாட்டினர் தமிழகத்திற்கு கிரேக்க தேசம் வரை கப்பலோட்டி வாணிபம் செய்து வந்த பரம்பரையினர் மறைக்கப்பட்டு விட்டனர். ஆங்கில ஏகாதிபத்தியத்தையே எதிர்த்து உலகிலேயே முதன்மையாக கப்பலோட்டிய மறத் தமிழர் வ. உ. சிதம்பரனாரை மறந்து விட்டது. தமிழகம் கொதித்தெழுந்து, டில்லி தூத்துக்குடியாக வேண்டும், தமிழகத்திலே சிதம்பரம் செல்ல வேண்டும் என்று தமிழகம் கூறியது. வடவர் காதில் விழவாபோகிறது இது? சுதந்திர இந்தியாவிலே முதல் கப்பலாக செல்ல வேண்டிய சிதம்பரம் செயலற்று போய் விட்டது.

சிதம்பரனாரின் சிதறிய எண்ணங்கள் தமிழகத்தின் கனவு இன்று நினைவாகிறது. ஓ நன்றிகெட்ட அரசாங்கமே! இதோபார் தமிழனின் பரம்பரையை! கப்பலோட்டிய தமிழனின் வம்சத்தைப் பார், வ. உ. சியின் வரலாற்றை! நீ அவருக்கு துரோகம்செய்துவிட்டாய். அன்று மட்டுமல்ல! இன்றும்! இதை நாங்கள் மறக்க முடியாது. இதோ பார்! எங்கள் தமிழர்களின் சக்தியை. கப்பலோட்டிய தமிழன் பிறந்து வளர்ந்த தூத்துக்குடியைப் பார். செங்கடலில் சிதம்பரம். "தூத்துக்குடியில் சிதம்பரம்" ஆம் தமிழ் மக்கள் கண்டுவந்த கனவு நினைவாகிறது. பெப்ரவரி ஒன்பதாம் தேதி தமிழன் வரலாற்றிலே ஓர் நன்னாள், பொன்னாள். தமிழகமே குதூகலித்த தனிப் பெரும் நாள். பெப்ரவரி ஒன்பது தூத்துக்குடியில் கப்பல் சென்றது! பெப்ரவரி ஒன்பது தூத்துக்குடியில் சிதம்பரம் செங்கடலை கிழித்துக் கொண்டு சென்றது. பெப்ரவரி ஒன்பது வடநாட்டவரால் மறைக்கப்பட்ட வீரத் தமிழன் சிதம்பரம் செங்கடலில் சென்றார். தூத்துக்குடியில் சிதம்பரத்தை இந்தியாவின் கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார் மிதக்க விட்டார். அவர் மிதக்க விட்டால் என்ன? சிதம்பரம் செங்கடலில் செல்ல வேண்டும் இது தமிழர்களின் ஆசை. ஆனால் திராவிடத் தனி அரசிலே முதல் கப்பல் மட்டும் சிதம்பரம் தான். சந்தேகமேயில்லை. இது உறுதி. அந்த நாள் தூரத்திலில்லை பக்கத்திலே இருக்கிறது. நாளுக்கு நாள் மணிக்கு மணி நிமிஷத்திற்கு நிமிஷம் நெருங்கிக் கொண்டே தான் இருக்கிறது. செல்லுக சிதம்பரம்! வாழ்க தமிழகம்.

!! வணக்கம் !!!

1-ம் பக்கத் தொடர்ச்சி

இடுப்பில் சுற்றிய மனைவியுடன் கோர வாழ்க்கை நடத்தும் ஏழைத் தொழிலாளி. ஆரியர்களால் கற்பிக்கப்பட்ட அறிவிற்குப் பொருத்தமற்ற பண்டிகை தினம் வருவதையும், பக்கத்து வீட்டுக்காரன் அத்தினத்தை பலே குஷியாகக் கழிப்பதையும் எண்ணி. யாரிடம் கடன் வாங்குவது என்ற ஏக்கத்துடன் வீற்றிருக்கும் பொழுது அவன் கண் முன், தக்காளிப்பழம் போன்ற தகதகப்பான மேனி. பலூன் போன்று பருத்த தொந்தியுடன் காட்சியளிக்கும் வட்டிக் கடை மார்வாரிகள் சென்னை முதல் குமரிவரை பரந்து கிடக்கிறார்களே இவர்கள் யார்? ஆகவே எந்தவகையில் வடநாட்டார் ஆதிக்கம் தென்னாடாகிய சென்னை மாகாணத்தில் இல்லை என்று கூறமுடியும்?

அடுத்தபடியாக "திராவிட கழகத்தினர் பதவியைக் கைப்பற்ற துவேஷப் பிரசாரம் செய்கின்றனர்" என்கிறார் காமராஜர்! பகுத்தறிவு இயக்கத்தின் தந்தை, திராவிடரின் நல்வாழ்வுக்கென்றே தீராது உழைத்துவரும் திராவிட கழகத்தின் தனிப் பெருந் தலைவர் பெரியார் இராமசாமி பலமேடைகளில் பகிரங்கமாக தெள்ளத்தெளியக் கூறி இருக்கின்றார், **பதவி எங்களுக்கு வேண்டாம்"** என்று, அதற்காகவேதான் திருச்சி மாநாட்டிலே பதவிப் பித்தர்களுக்கும், பட்டதாரிகளுக்கும் சீட்டுக் கிழிக்கப்பட்டது. அப்படியிருக்க பதவியை உடும்புப் பிடியாகப் பிடித்துக் கொண்டு பணியாக்களின் பாதந் தாங்கிகளாக இருக்கும் சிலர் ஏன் பதற வேண்டும்?

பதவி என்ன? காமராஜ் கூட்டங்களின் பாட்டன் வீட்டுச் சொத்தா? இல்லை தபால் ஆபிஸ்களைக் கொளுத்தி தந்திக் கம்பிகளையும் தண்டவாளங்களையும் தகர்த்து, பல லக்ஷ ரூபாய்களைப் பாழ்படுத்திய பராரிகளின் பாட்டன் வீட்டுச் சொத்தா? கள்ள மார்க்கட்டிலே கொள்ளை லாபமடிப்பதையே குறிக் கோளாகக் கொண்ட கதர்ச் சட்டைக்காரர்களுக்குத்தான் சொந்தமா? ஆகவே பதவி, பாட்டாளி மக்களின் நன்மதிப்பிற்குரிய எவருக்கும் உரியது. அதை யார் வேண்டுமானாலும் கைப்பற்றலாம். ஒருவரும் எவரையும் தடுக்க முடியாது.

"துவேஷப் பிரசாரம்" என்கிறார்! எது துவேஷப் பிரசாரம்? அண்டிப்பிழைக்க வந்த ஆரியக் கூட்டம் நம் முன்னோர்களை நய வஞ்சகத்தாலும் நங்கையரின் வேல் விழியாலும் மயக்கி ஆரிய (அ)நாகரீகத்திற்கு அடிமை கொண்டு, அதன் காரணமாக நம்மவரை "சூத்திரன், தாசி மகன்" என்று இழித்துக் கூறி விவேகத்தை ஊட்டுவதா துவேஷப் பிரசாரம்?

பார்ப்பனீயத்திற்கு பக்க பலமாக, அக்கூட்டத்தினரின் சுக போக வாழ்விற்காக எழுதி வைத்துக் கொண்ட, இதிகாச, புராண சாத்திரங்களில் எள்ளத்தனையும் நம்மவருக்கு நியதி புகட்டவில்லை. என்ற நேர்மை எடுத்துக் கூறுவதா துவேஷப் பிரசாரம்?

திராவிடர்களின் ஒப்பற்ற உழைப்பின் காரணமாக உருவாக்கப்படும் செல்வங்கள் அத்தனையும் ஊதாரிக் கூட்டத்தினராகிய, பனியா பார்ப்பனர்களால் சுரண்டப்படுவதை சுட்டிக் காட்டும் ஒப்பற்ற அறிஞர், ஈரோட்டு, உலகப் பெரியார், ஈ. வெ. ராமசாமி அவர்கள் மடமையிலிருந்து மக்கள் விடுபட, திராவிட நாடு தனி நாடாக, திராவிட நாடு திராவிடருக்கேயாக வேண்டுமென்று பிரசாரம் செய்வதா துவேஷப் பிரசாரம்? காமராஜருக்கு கண் திறக்கட்டும்! வாசகர்கள் தீர்ப்புக் கூறட்டும்!

திருமணம்

13-2-49 அன்று காலை 7-30 மணிக்கு தோழியர் குஞ்சதம் குருசாமி B. A. L. T. அவர்கள் தலைமையில் தோழர் C. ராஜகோபாலனுக்கும் தோழியர் A. லலிதா அம்மைக்கும் திருமணம் நடைபெறும். பெரியார் ஈ. வே. ரா. தோழர். குருசாமி, B. A. பேசுவார்கள். மாலை 5-30 மணிக்கு தோழர் க. அன்பழகன் தலைமையில், தோழியர் சத்தியவாணிமுத்து, அ. மு. பரமசிவானந்தம் B. L., M. Litt., காஞ்சி மணிமொழியார் அவர்களால் பாராட்டுக் கூட்டம் நடைபெறும். அனைவரும் வருக.

இடம்:—77. கர்னுடிக் மில் லைன்

பொம்பூர் பேரக்ஸ் மதராஸ்.

★ "உடுமலை பீரங்கி"யே வா ★

V. K. R.

சீர்திருத்த கருத்துக் கொண்ட "உடுமலை பீரங்கி"யே வா! உன் வருகையால் நாடு விழிப்புற்று வளம் பெற்று வாழ்க. உன் வரவால் மகிழா மக்கள் இருக்க முடியுமா! வருந்தா வீணர் இருக்க முடியுமா! கவலையுறு காதகர் இருக்க முடியுமா.

உங்கள் பீரங்கி மக்களை மடமையில் ஆழ்த்தியபுராண குப்பைகளை பொசுக்கட்டும்.

இந்நாட்டு மக்களை சூழ்ச்சியால் அடக்கி சுகவாழ்வு கொள்வோரின் சூழ்ச்சி சுரண்டல்களை சுக்கு நூராக்கட்டும்.

இந்நாட்டு வாழ்வை வெறுத்து பரலோக (அப்படி ஒன்று இருப்பதாக எண்ணி) வாழ்வை விரும்பி பணத்தை வாரி இறைக்கும் பண்பட்ட உள்ளம் கொண்டோரை திருத்தட்டும்.

மதவெறியை யூட்டி மக்களை மாக்களாக்கும் மந்த புத்தியினரின் செய்கையை மடியச் செய்யட்டும்.

கன்னிகைகளை காமப்பார்வையால் பார்த்து, கருத்திழந்து குழந்தைகளாகிய கடவுள்களையும், மரத்தின் மேல் உட்கார்ந்து மங்கையர் களின் மர்மக் குறிகளைப் பார்க்கும் மோகக் கடவுள்களையும், அணங்குகளின் மேல் கொண்ட ஆசையால் அறிவிழந்து, அவதிப்பட்ட அமரர்களையும் நீக்கி, 'அறிவே தெய்வம்' என்ற அரிவுரையை அள்ளி வீசட்டும்.

நூற்றுக்கணக்கான சாதிகளை நொறுக்கி 'ஒன்றே குலம்' என்ற உண்மைப் பாட்டினை உணர்த்தட்டும்.

சாதித்திமிர் பிடித்தலையும் சண்டாளர்களையும், வைதீகப் பித்து பிடித்தலையும் வஞ்சகர்களையும், பணத்திமிர் பிடித்தலையும் படாடோபர்களையும் திருத்தட்டும்.

ஆரிய மடுவிலே வீழ்ந்து சனாதன சேற்றிலே சிக்கி, வர்ணாஸ்ரம வலையில் வீழ்ந்து, புராணபூச்சிகளால் கொத்தப்பட்டு, உலகோர் நகைக்கும் அளவுக்கு தாழ்ந்த நிலையை அடைந்த நம் நாட்டை சீர் செய்யட்டும்.

தன் மானமற்ற திராவிடராய் திராவிட நாட்டிலே இருந்து கொண்டு திராவிடர்களை காட்டிக் கொடுக்கும் திராவிடர்களை திருத்தட்டும்.

இந்நாட்டுக் குரிய பழங்குடி மக்களைக் கண்டால் 'எட்டடா' என்று உறுமும் உலுத்தர்களை ஒழிக்கட்டும்.

நாட்டிலே நல்வாழ்வு அற்று நாயினுங் கேடாய் நலிவுறும் நல்லோரான பழங்குடி மக்களின் வாழ்வை வளமாக்கட்டும்.

பெண்ணுலகிலே நிலவும் பேதமை, விதவை, வேசி என்ற சொல் இல்லாது விரட்டட்டும், ஆணுக்குப் பெண்ணடிமை என்ற பிரிவு நீங்கி, பெண்கள் உரிமையுடன், வளமுடன் வாழ வகை செய்யட்டும்.

நாட்டிலே எதிர்ப்புக் கஞ்சாது, உலுத்தர்களின் உறுமலுக்கஞ்சாது, பகைவர்களின் பசப்புக்கஞ்சாது, எடுகளின் இறுமாப்புக்கஞ்சாது, சுக வாழ்வை உதறி ஊர் ஊராய்ச் சுற்றி உண்மையை உணர்த்திவரும் பெரியாரின் பொன் மொழிகளை பரவச் செய்யட்டும்.

அறிவற்றவர்களின் அலறலுக் கஞ்சாது அடுக்கு மொழியால் அறிவு உணர்ச்சியூட்டும் அறிஞர் அண்ணாவின் அறிவுரையை அள்ளி வீசட்டும்.

காலத்துக் கேற்ற கருத்தை கவிதை மூலம் நாட்டுக்கு நல்கும் பாரதிதாசனின் கவிதைகளை நாட்டிலே நிலவிடச் செய்யட்டும்.

நம் நாடு நலமுற, மக்கள் தம் வாழ்வு மலர, நாட்டுப் பிரிவினைக்கு ஆக்கம் கொடுக்கட்டும்.

2-ம் பக்கம் தொடர்ச்சி

நாட்டாரையும் காட்டிக் கொடுக் "ஜூடாசுகள்!' இருக்கும்வரை நாடு விடுதலையடைய முடியுமா?—முன்னேற்றமடைய முடியுமா? என்பதைத் தமிழர்கள் அனைவரும் சிந்தித்துப் பார்த்து செயலாற்ற முன் வரவேண்டும். நமது திராவிடநாட்டின் முன்னேற்றத்திற்கு—விடுதலைக்கு எதிரிடையாக இருந்துவரும் சூழ்ச்சியும் சதிச்செயலும் நிறைந்த சுயநலக்காரர்களின் எண்ணத்தை மட்டந்தட்ட—குழிதோண்டிப் புதைக்க ஒவ்வொரு திராவிடனும் முன் வரவேண்டும்.

தமிழர்களே! நீங்கள் இனி செய்யவேண்டியதெல்லாம் தமிழர்களின் நலங்கருதி, தமிழர்களால் (திராவிடர்களால்) நடத்தப்பட்டு வரும் பத்திரிகைகளுக்கு ஆதரவு காட்டுவதேயாகும். தமிழ் நாட்டு மக்கள் முக்கியமாக எழுத்தாளர்கள்—கவிஞர்கள் பத்திரிகை உலகத்தைக் கைப்பற்றவேண்டும், நாம் முன்னேற்றமடைய வேண்டுமானல்! பத்திரிகையே **"நாட்டின் உயிர் நாடி"** அதன் மூலமாகத்தான் நாம் இழந்த திராவிடத்தை மீண்டும் கைப்பற்றி, திராவிடத்தைத் திருத்தி தரணிபுகழ—மாண்பு சிறக்க தனியாட்சி நடத்த முடியும்.

25-2-49 அன்று ஆரம்பம்

Edited and Published by B. Ranganatham. Mg. Editor R. Rajagopal 33 Thiruvengada Mudali Street, Periamet, Madras 3. Printed by J. A. SILVIA at the 'LIBERATOR" Press, 2-11, Mount Road, Madras 2.